# தலைவாசல் Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 98 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை | ஜனவரி 12, 2021




## ரஞ்சன் ராமநாயக்கவிற்கு 4 வருட கடூழிய சிறை



நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு 04 வருட கால கடூழிய சிறைத்தண்டனை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய விசேட அமர்வினால் இன்று (செவ்வாய்க்கிழமை) இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 03

## பேலியகொடவில் ஒரு பகுதி தனிமைப்படுத்தப்பட்டது!

கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதன் எதிரொலியாக பேலியகொட பிரதேசத்தில் ஒரு பகுதி இன்று மாலை 06.00 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

பேலியகொட கங்கபட கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 90ம் இலக்க தோட்டம் இன்று (ஜன-12) மாலை 06.00 மணி முதல் மறு அறிவித்தல் வரும் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.





## யாழில் 149.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவு

யாழில் 149.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் நேற்று (திங்கட்கிழமை) காலையிலிருந்து மழையுடன் கூடியகால நிலை தொடர்ந்து நிலவி வருகின்றது.

இந்நிலையில் நேற்று காலையிலிருந்து தற்போது வரை யாழில் 149.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் யாழ்.நகரப் பகுதியிலேயே அதிகளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் வானிலை ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி பிரதீபன் கூறியுள்ளார்.

மேலும் 24 மணித்தியாலத்திற்கு இந்த மழையுடன் கூடிய காலநிலை தொடரும். வட.பகுதியில் 100மில்லி மீற்றர் எதிர்பார்க்கப்படுகிறது. காற்று 40- 50 கிலோ மீற்றர் வேகத்தில் 03

## மட்டு. போதனா வைத்தியசாலையில் 21 ஊழியர்களுக்கு கொரோனா தொற்று

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களில் 21 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் தேவையின்றி வைத்தியசாலைக்கு வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறும். கிளினிக் நோயாளர்கள் தபாலகங்கள் மற்றும் கிராமசேவகர் ஊடாக மருந்துகளை பெற்றுகொள்ளுமாறு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கணேசலிங்கம் கலாரஞ்சினி தெரிவித்தார்.

போதனா வைத்தியசாலையில் இன்று செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது, உகன ஆகிய ஆறு வலயங்கள் சிவப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 03



இந்திய அரச நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட

## யாழ். கலாசார மண்டபத்தை கபளீகரம் செய்ய அரசு முயற்சி!

### யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் நிராகரிப்பு

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாணம் கலாச்சார மண்டபத்தை மத்திய அரசின் ஆழுகைக்குள் வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை யாழ்.மாநகர முதல்வர் 03

## அலுவலகக் கடமை நேரத்தை நெகிழ்வாக்க அரசு ஆலோசனை

அலுவலக கடமைகளுக்காக நிலையான கடமை நேரத்திற்கு பதிலாக நெகிழ்வான (Flexible) கடமை நேரத்தை தீர்மானிப்பது தொடர்பிலான நடைமுறைக்குக் கொண்டுவர அரசு கவனம் செலுத்தியுள்ளது. 03

## பிச்சை போன்று பாசாங்கு செய்து வீட்டிலிருந்த நகைகளைக் கொள்ளையடித்த பெண்

பொதுச் சுகாதார பரிசோதகர் என்று பாசாங்கு செய்து வீடொன்றிலிருந்து பல லட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்ற பெண் மக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

அவருக்கு உதவி ஆண் ஒருவரும் பிடிக்கப்பட்டு இருவரும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் மக்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொண்டமானாறு அரசடியில் இன்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீடொன்றுக்குச் சென்ற பெண் ஒருவர், அங்கிருந்தவர்களை அழைத்து தன்னை பொதுச் சுகாதார பரிசோதகராக அறிமுகப்படுத்தி வெள்ள நிலமை 03

## கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக மட்டு. முன்னாள் அரச அதிபர்

கிழக்கு மாகாண விவசாய மற்றும் நீர்பாசன விலங்கு உற்பத்தி கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயாலாளராக மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் நேற்று (11) காலை தனது புதிய கடமையினைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார். 03






தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

## கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் 599 பேருக்கு கொரோனா உறுதி

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த 6 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இதுவரை 599 கொரோனா நோயாளர்கள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பதிவாகியுள்ளதாக கம்பாஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகளின் மாவட்ட பணிப்பாளர் டாக்டர் மிகாரா எப்பா தெரிவித்தார்.

நேற்று அடையாளம் காணப்பட்ட ஆறு நோயாளிகளும் இந்திய முதலீட்டு திட்டத்தின் கீழ் இயங்கும் தொழிற்சாலையிலும் கணினி உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையிலும் பணிபுரியும் ஊழியர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐந்து கொரோனா நோயாளிகள் நேற்று சீதுவ சுகாதாரப் பிரிவிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## விவேகானந்தரின் பிறந்ததினத்தை அனுஷ்டிக்க வவுனியாவில் தடை

சுவாமி விவேகானந்தரின் 158ஆவது பிறந்ததினத்தை அனுஷ்டிக்க சுகாதார தரப்பினரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தரின் நினைவுத் தூபியினை நகரசபையினர் சுத்தம் செய்து இன்று (செவ்வாய்க்கிழமை) பிறந்த நாளை அனுஷ்டிப்பதற்குறிய ஏற்பாடுகளை முன்னெடுத்த போதிலும் அதற்கு சுகாதார பிரிவினர் தடை விதித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் 124 ஆக அதிகரித்துள்ளமையினால், சுகாதார நடைமுறைகளுக்கு அமைய நிகழ்வினை நடத்த சுகாதார பிரிவினர் தடையுத்தரவு பிறப்பித்தனர்.

இந்த நிலையில், தடையுத்தரவை மீறி நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டால், தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவீர்கள் எனவும் உத்தர பிறப்பித்துள்ளனர்.

இதன் காரணமாக இன்று காலை 8.30 மணியளவில் இடம்பெறவிருந்த குறித்த நிகழ்வு நிறுத்தப்பட்டுள்ளது.

# அடையாளம் அற்ற மனிதர்களாக அச்சம் மிகுந்த சூழ்நிலையில் தமிழர்கள்



அடையாளம் அற்ற மனிதர்களாக தமிழர்களாகிய நாம் மாறப்போகிறோமா என்ற அச்சம் மிகுந்த சூழ்நிலையில் தமிழர்கள் வாழ்வதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் “மிகமுக்கியமாக இன்றைய காலகட்டம் என்பது எல்லோருக்குமே ஒரு அச்சம் மிகுந்த சூழ்நிலையைத் தந்திருக்கிறது. இன்று என்ன நடக்கிறது, நாளை அல்லது நாளை மறுதினம் என்ன நடக்கும் என்ற கேள்விகளோடு நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அடையாளத்தைத் தொலைத்த மனிதர்களாக அடையாளம் அற்ற மனிதர்களாக நாம் வாழவேண்டிய காலம் வருமோ அல்லது யார் யாரெல்லாம் எப்படி எம்மை ஆளப்போகிறார்கள் என்கிற அச்சம் மிகுந்த சூழ்நிலையில்தான் நாம் இருக்கிறோம்.

இவ்வேளையில், நான் இளைஞர்களைக் கோருவது இந்த மண்ணில் நாம் தமிழ் தேசிய இனமாக எங்கள் அடையாளத்தைத் தொலைத்து விடாமல் நிமிர்ந்து வாழ்கின்ற இனமாக, உணர்வுகள் சூழ்ந்த இனமாக இந்த மண்ணிலே நாம் வாழவேண்டும்.

நேற்றுக்கூட, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவன் ஒருவர் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார். அந்த மாணவனிடம் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு ‘உணர்வு என்பது உள்ளத்தில் மட்டும் இருந்து வந்தால் போதுமானது தாய், தந்தையிரிடம் கேட்கவேண்டும் என்று நான் யோசிக்கவில்லை. இங்கே எனது இனம் அழிக்கப்படுகிறது. என் இனத்தின் அடையாளங்கள் தொலைக்கப்படுகிறது அதனால் இந்தப்போராட்டத்தில் குதித்து இருக்கின்றேன்’ என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தச் செய்தியெல்லாம் நாங்கள் இன்னும் இன்னும் எத்தனையோ இடர்களை சந்திக்கப் போகின்றோம். சிங்கள, பௌத்த அரசுகளால் சூழப்பட்டுள்ள இந்த நிலை மிகப்பெரிய கேள்விகளை எங்கள் முன்னால் வைத்திருக்கிறது. இவற்றுக்கெல்லாம் அஞ்சாது சோரம் போகாதவர்களாக வாழவேண்டும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாழில் கடும் மழை: 74 குடும்பங்கள் பாதிப்பு

நேற்று காலையிலிருந்து யாழ் மாவட்டத்தில் காணப்பட்ட மழையுடன் கூடிய காலநிலையின் காரணமாக கடந்த 24 மணி நேரத்திற்குள் 74 குடும்பத்தை சேர்ந்த 288 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்தார்

நேற்று காலையிலிருந்து யாழ்ப்பாண குடாநாட்டில் பெய்த மழையின் தாக்கத்தின் காரணமாக 8 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

யாழில் 74குடும்பங்களைச் சேர்ந்த 288 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 8 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும், மேலும் குறித்த பாதிப்புகள் தொடர்பானவிபரங்கள் சேகரிக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## தலைவாசல் Thalaivaasal தினம் ஒரு ஆரோக்கிய தகவல்

### நோயுள்ள போது குழந்தைகளுக்கான உணவூட்டல்

நோய் உள்ள போதும் அதன் பின்னரும் உணவூட்டலில் சரியான நடைமுறைகளை கடைப்பிடித்தல், விரைவாகக் குணமடைவதற்கும் வளர்ச்சியையும் விருத்தியையும் பேணுவதற்கும் உதவும்.

நோயுற்ற குழந்தைக்கு வழமையை விட மிக பொறுமையுடன் உணவூட்ட வேண்டும். சிறிய அளவிலான உணவுகளை அடிக்கடி வழங்க வேண்டும்.

பிள்ளை விரும்பும் போசாக்கான உணவை வழங்க வேண்டும். போசாக்கு நிறைந்த முட்டை, மீன், கோழியிறைச்சி போன்றவற்றை வழங்கலாம். உணவு தயாரிக்கும் போது வழமைபோல எண்ணெய், தடிப்பான தேங்காய் பால் ஆகியவற்றை சேர்த்து கொள்ளவும். தாய்பால் வழங்குவதாயின் தாய்ப்பாலூட்டலைத் தொடருங்கள்.

பிள்ளை காய்ச்சல் இருக்கும் போது உணவில் விருப்பம் காட்டாது என்பதால் உணவு வழங்க முன் காய்ச்சலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்.

போதியளவு நீராகாரம் வழங்க வேண்டும்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீ வ்**

# உள்ளூராட்சித் தேர்தல் முறைமையை மீள்பரிசீலனை செய்ய குழு நியமனம்!

உள்ளூராட்சித் தேர்தல் முறைமையை மீள்பரிசீலனை செய்வதற்காக மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் நியமித்துள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் முன்னாள் செயலாளரும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்கவின் தலைமையில் குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த குழுவில் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சுதந்த லியனகே, காணி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜயலத் ரவி திஸாநாயக்க ஆகியோர் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் கட்டளை சட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ கலப்பு முறையின் காரணமாக உள்ளூராட்சி நிறுவனங்களின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டதாக பலதரப்புக்களிடமிருந்து முறைபாடுகள் கிடைத்திருந்தன.

இந்நிலையிலேயே அவற்றை ஆராய்ந்து, மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழுவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

# கொரோனா மரணம் 240 ஆக உயர்வு!



நாட்டில் கொரோனா வைரஸ் காரணமாக மேலும் 8 பேர் மரணமடைந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 240 ஆக உயர்வடைந்துள்ளன.

வெலிகட சிறைச்சாலை கைதியான 52 வயதுடைய ஆண் ஒருவர் கொவிட்-19 தொற்று உறுதியான நிலையில் வெலிகட சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், ஜனவரி 06 ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது மரணத்திற்கான காரணம் கொரோனா வைரஸ் நிமோனியா நிலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராஜகிரிய பகுதியை சேர்ந்த 61 வயதான ஆண் ஒருவர் கொரோனா தொற்று உறுதியான நிலையில் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த 7ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது மரணத்திற்கான காரணம் கொவிட்19 நிமோனியா மற்றும் கடும் நீரிழிவு நோய் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டக்குளி பகுதியை சேர்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடந்த 8 ஆம் திகதி மரணித்தார்.

கொரோனா நிமோனியா நிலையே அவரது மரணத்திற்கான காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - 12 பகுதியைச் சேர்ந்த 36 வயதான பெண் ஒருவர் கொரோனா தொற்று உறுதியான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது கடந்த 08ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது மரணத்திற்கு கொவிட்19 நிமோனியா மற்றும் வலிப்பு நோய் நிலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு 14 பகுதியை சேர்ந்த 54 வயதான ஆண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவர் என இனங்காணப்பட்டார்.

அதன் பின்னர் ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் கடந்த 10 ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது மரணத்திற்கான காரணம் கொவிட் நிமோனியா நிலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பண்டாரகம பகுதியை சேர்ந்த 70 வயதான பெண் ஒருவர் களுத்துறை பொது வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர் என இனங்காணப்பட்டார்.

அவர், பின்னர் ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதுடன் அங்கு கடந்த 10 ஆம் திகதி மரணித்தார்.

அவரது மரணத்திற்கான காரணம் கொரோனா நிமோனியா மற்றும் கடும் சிறுநீரக நோய் நிலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், களுத்துறை தெற்கு பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவர் களுத்துறை பொது வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்தபோது கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதன் பின்னர், தேசிய தொற்று நோயியல் பிரிவிற்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு கடந்த 10 ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது மரணத்திற்கான காரணம் கொரோனா தொற்று மற்றும் குருதி விசமானமை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய ஆண் ஒருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த போது, அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

அதன் பின்னர் அவர், வெலிகந்தை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதுடன் அங்கு நேற்று உயிரிழந்தார்.

அவரது, மரணத்திற்கான காரணம் கொவிட் 19 நிமோனியாவுடன் குருதி விசமானமை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாகாணசபைத் தேர்தல் உரிமை இல்லாமல் போனதற்கு கூட்டமைப்பே பொறுப்பு

மாகாணசபைத் தேர்தல் உரிமை வடக்கு மற்றும் கிழக்கு மக்களிடமிருந்து இல்லாமல் போனதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பொறுப்பு கூற வேண்டும் என போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதில் வழங்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் காமினி லொகுகே மேலும் கூறியுள்ளதாவது, "இனப்பிரச்சினை என்று கூறிக் கொண்டு தமிழ் அரசியல்வாதிகள் அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள்.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்பவர்கள் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

மாகாணசபைத் தேர்தல் உரிமை வடக்கு மற்றும் கிழக்கு மக்களிடமிருந்து இல்லாமல் போனதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பொறுப்பு கூற வேண்டும்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துமாறு ஆரம்ப காலத்தில் இருந்து பலதரப்பினரால் அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது.

13ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்தினால் நாட்டில் மாறுபட்ட பல பிரச்சினைகள் தோற்றம் பெறும். காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் ஒரு மாகாணத்திற்கு மாத்திரம் பிரித்து வழங்கினால் அங்கு சுயாட்சி தன்மையே நிலவும்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு மாத்திரமல்ல எந்த மாகாணங்களுக்கும் ஒருபோதும் பிரித்து வழங்கப்படமாட்டாது.

இவ்விடயத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் விதிவிலக்கல்ல. ஏனைய மாகாணங்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள், சலுகைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

நாட்டில் இனப்பிரச்சினை என்பதொன்று கிடையாது. 2009ஆம் ஆண்டுடன் இனப்பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்பட்டு தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மாகாணசபை முறைமை நாட்டுக்கு அவசியம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். மாகாண சபை முறைமையில் ஒரு சில குறைப்பாடுகள் காணப்படுகின்றன.

அவை திருத்தப்பட்டு மாகாண சபை தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்படும். எந்த இன மக்களின் உரிமைகளையும் பறிக்க வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு கிடையாது.

பொது சட்டத்திற்கு அனைத்து இன மக்களும் கட்டுப்பட்டால் எவ்வித பிரச்சினைகளும் தோற்றம் பெறாது" என அவர் தெரிவித்துள்ளார்

# முள்ளியவளையில் கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சம் கொலை செய்யப்பட்டு வீசப்பட்டுள்ளது

## சட்ட மருத்துவ நிபுணரின் ஆய்வில் தகவல்

முள்ளியவளை நாவல்காட்டு கிராமத்தில் கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சம் நெஞ்சில் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட்டு வீசப்பட்டுள்ளது என்று சட்ட மருத்துவ வல்லுநரின் நிபுணத்துவ ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த நபர் 6 மாதங்களுக்கு அண்மித்த காலப்பகுதியில் அவர் கொலை செய்யப்பட்டுள்ளமையும் ஆய்வில் வெளிப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவல்காட்டு கிராமத்தில் மக்கள் நடமாற்றம் குறைவான பகுதியிலுள்ள கிணற்றிலிருந்து உருக்குலைந்த சடலம் ஒன்று கடந்த டிசெம்பர் 30ஆம் திகதி மீட்கப்பட்டது.

மாடு மேய்ப்பதற்காக அந்தப் பகுதிக்குச் சென்ற ஒருவர் கிணற்றிலிருந்து துர்நாற்றம் வீசுவதை தொடர்ந்து எட்டிப் பார்த்துள்ளார்.

அதன்போது உருக்குலைந்த நிலையில் சடலம் இனம் காணப்பட்டுள்ளது. ஆண்கள் அணியும் ரீ சேர்ட்டுடன் சடலம் காணப்பட்டது.

முல்லைத்தீவு நீதிவான் பா.லெனின் குமார், சட்ட மருத்துவ வல்லுநர் கனகசபாபதி வாசுதேவா முன்னிலையில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டன.

மனித எச்சங்கள் மன்னார் சட்ட மருத்துவ வல்லுநர் செல்லையா பிரணவனினால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட போது, நெஞ்சில் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது.

அத்துடன் 6 மாதங்களுக்கு உள்பட்ட காலப்பகுதியில் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் சட்ட மருத்துவ வல்லுநரின் ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் முள்ளிவளை பகுதியில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் காணாமற்போனவர் தொடர்பில் மரபணு பரிசோதனை செய்வதற்கான பணிகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## அலுவலகக் கடமை...

நேற்யை தினம் இவ்வாண்டுக்கான பாடசாலை முதலாம் தவணை ஆரம்பமானதைத் தொடர்ந்து பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கு ஆர்வம் கொண்டுள்ளனர்.

தற்போதைய கோரோனா தொற்று நிலமைக்கு மத்தியில் தமக்குரிய வாகனங்களில் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் பெற்றோர் கவனம் செலுத்தியுள்ளனர்.

இதனால் வீதிகளில் வாகன நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்கு மாற்றாக பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் அலுவலகங்களில் கடமைகளை ஆரம்பிப்பதற்கான நேரங்களில் மாற்றங்களை மேற்கொண்டால் இந்த வீதி நெருக்கடியை தடுக்க கூடியதாக இருக்கும் என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான உதய கம்மன்பிலஅமைச்சர் பதிலளிக்கையிலேயே இந்த விடயத்தை கூறினார்.

"பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகின்றது. அதற்காக அலுவலகங்களில் 8 மணிக்கு கடமை நேரம் ஆரம்பமாகின்றது. வர்த்தக நிலையங்கள் 9 மணி அல்லது 9.30 மணிக்கு தமது கடமைகளை ஆரம்பிக்கின்றன.

இருப்பினும், தற்போதைய சூழ்நிலையில் இந்த நேரமாற்றம் தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது. வாரத்தில் 40 மணித்தியாலய கடமை நேரத்தை முழுமைபடுத்துவதில் தொழில்நுட்ப உதவிகளை பயன்படுத்துவது குறித்தும் அரசு கவனம் செலுத்தியுள்ளது. வெளிநாடுகளில் இவ்வாறான நடைமுறைகள் இருக்கின்றன" என்றும் அமைச்சர் உதய கம்பன்பில தெரிவித்தார்.

## பிளச்ஜ போன்று...

தொடர்பில் ஆராய வந்துள்ளேன் என்று கூறியுள்ளார். அவர் கறுப்பு மழை அங்கி அணிந்திருந்துள்ளார். வீட்டின் சுற்றாடலில் தேங்கி நின்ற வெள்ளத்தை தனது அலைபேசியில் ஒளிப்படங்கள் எடுத்த அந்தப் பெண், ஆடை மாற்றுவதற்கு அறையைத் தருமாறு கேட்டுள்ளார்.

அதனால் அறை ஒன்றை வீட்டிலுள்ளவர்கள் வழங்கியுள்ளனர். அதற்குள் சென்று கதவைப் பூட்டிவிட்டு பெட்டகத்திலிருந்த 5 தங்கப்பவுண் தாலிக்கொடி, சங்கிலி, மோதிரங்கள் ஆகியவற்றை கொள்ளையிட்டு அந்தப் பெண் அங்கிருந்து தப்பித்துள்ளார்.

சந்தேகம் கொண்ட குடும்பத்தினர் அறைக்குள் சென்று பார்த்த போது, பெட்டகத்திலிருந்த நகைகளைக் காணவில்லை. சம்பவம் தொடர்பில் ஊரவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் ஒன்றிணைந்து எல்லாத்திசைகளிலும் தேட ஆரம்பத்தனர்.

அதன்போது அந்தப் பெண் ஆண் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் பலாலி பகுதியில் பயணித்த போது, அவர்கள் இருவரையும் துரத்திச் சென்றோர் மடக்கிப்பிடித்தனர்.

இருவரும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பட்டனர்.

பெண்ணின் கைப்பையில் இருந்து பெருமளவு நகைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நகைகள் கொள்ளையிடப்பட்ட வீட்டின் உரிமையாளர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை, அந்தப் பெண் வேறும் சில வீடுகளுக்குச் சென்று தன்னை கிராம அலுவலகர் எனக் கூறியுள்ளார் என்று ஊரவர்கள் தெரிவித்தனர்ர

## மட்டு போதனா...

மட்டக்களப்பு வைத்தியசாலையில் கொரோனா தொற்றுள்ள நோயாளிகள் அதிகரித்து காணப்படுகின்றது.

இதுவரை 425 நோயாளர்கள் சந்தேகத்தின் பேரில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் அவர்களில் 80 பேர் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதோடு 3 நபர்கள் உயிரிழந்துள்ளார்கள்

இதுவரை வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்களில் 21 நபர்களுக்கு தொற்று இனங்காணப்பட்டுள்ளது.

ஊழியர்களுக்கு தொற்று ஏற்படும்போது வைத்தியசாலையின் சேவையினை முன்னெடுப்பதற்கு ஆளணி பற்றாக்குறை எங்களுக்கு ஏற்படலாம் இதனை தவிர்ப்பதற்காக நோயாளியிலிருந்து ஊழியர்களுக்கும் ஊழியர்களிலிருந்து நோயாளியிக்கும் தொற்று பரவுதலை தடுப்பதற்காக உடன் அமுலுக்கு வரும் வகையில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஊழியர்கள் தகுந்த பாதுகாப்பு சுகாதார வழிமுறைகளை பின்பற்றி சேவைகளை தற்பொழுது செய்து கொண்டிருக்கிறார்கள் அதேவேளை தொற்றா நோய்களான இருதய நோய் சிறுநீரக நோய் புற்றுநோய் மற்றும் வயோதிபர் போன்றவர்களுக்கு அதி கூடிய பாதிப்புகளை ஏற்படுத்துவதால் வைத்தியசாலைக்கு கிளினிக் வருவதனை தவிர்த்து கிராம சேவகர் அல்லது தபால் மூலமாக உரிய மருந்துகளை பெற்றுக்கொள்ளமுடியும் அல்லது 065 313 3330 மற்றும் 065 313 3331 தொலைபேசி ஊடாக அழைப்பினை மேற்கொண்டும் மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவித்தார்.

## கிழக்கு மாகாண...

இவர் மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசாங்க அதிபராக பதவிவகித்த காலத்தில் பல அபிவிருத்தி பணிகளில் பாரிய பங்கெடுத்து சிறப்பான சேவையாற்றியதோடு தனது பதவிக்காலங்களில் மாவட்டத்தில் சட்ட விரோதமான மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு சிறந்த பொறிமுறையினை கையாண்டு செயல்ப்படுத்தியது நுண்கடன்களை மாவட்டத்தில் தடைசெய்து ஏழை மக்களுக்கு சமுர்த்திக்கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை கொரோனா காலங்களில் மக்களின் தேவை உணர்ந்து நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய அரச...

வி.மணிவண்ணன் நிராகரித்திருப்பதுடன், யாழ். மாநகரசபையினால் அதனை நிர்வகிக்க முடியும். எனவும் அதற்கான ஆளணியை பெற்றுக் கொடுக்க ஆவண செய்யுமாறும் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

குறித்த கலாச்சார மண்டபத்தை விரைந்து திறப்பது குறித்த கலந்துரையாடல் இன்று கொழும்பில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத், யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், இந்திய துணைத் தூதுவர், வடமாகாண ஆளுனர் திருமதி சார்ள்ஸ், வட மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், யாழ்.மாநகர ஆணையாளர் ரி.ஜெயசீலன், யாழ்.அரசாங்க அதிபர் மகேசன் உள்ளிட்டோர் பங்குபற்றினார்கள்.

இதில் யாழ் மாநகர சபையினால் குறித்த கலாச்சார மையத்தை பராமரிக்க முடியாது. என்றும் அதனால் அதனை மத்திய அரசின் ஆளுகைக்கு எடுப்பது தொடர்பில் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

இதன்போது யாழ் மாநகர முதல்வர் இதனை யாழ் மாநகர சபையினால் பராமரிக்க முடியும் என்றும் அது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைவாக எடுப்பதாகவும் கூறினார். இதன்போது குறித்த கலாச்சார மையத்தை நிர்வகிப்பதற்குரிய ஆளணியை விரைந்து உருவாக்கி தருமாறு மணிவண்ணனால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பின்னர் இதே போல கொழும்பில் உள்ள தாமரைத் தடாக கட்டட தொகுதி எவ்வாறு பராமரிக்கப்படுகின்றது என்பதையும் முதல்வரும் ஆணையாளரும் நேரில் சென்று ஆராய்ந்தனர்.

## யாழில்...

வீசக்கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த மழையுடன் கூடிய காலநிலை காரணமாக பொதுமக்கள் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதோடு கடல் தொழிலுக்குச் செல்வோர், தாழ்நிலப் பகுதிகளில் உள்ளவர்கள் அவதானமாக இருக்குமாறும் பிரதீபன் வலியுறுத்தியுள்ளார்.

## ரஞ்சன் ராமநாயக்கவிற்கு...

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பில் அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதையடுத்து, அவருக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற கலைப்பு தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்த, நீதிபதிகள் குழுவின் அமர்வு தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டதாக தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் இடித்தழிக்கப்பட்டமைக்கும் எமக்கும் எந்த தொடர்புமில்லை



யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் இடித்தழிக்கப்பட்டமைக்கும் தமக்கும் எந்த தொடர்புமில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அரசாங்க துணைப் பேச்சாளர் உதய கம்மன்பில, இந்த விடயத்தில் அரசாங்கம் எந்தவொரு கொள்கை முடிவையும் எடுக்கவில்லை எனக் கூறினார்.

யுத்த நினைவுச் சின்னத்தை அழித்து பின்னர் அதை புனரமைப்பதற்கான முடிவு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினாலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டது என்றும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட போர் நினைவுச் சின்னத்தை அழிக்கும் முடிவை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு கடந்த வாரம் ஆதரித்தது.

அதாவது இந்த முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் நாட்டின் ஒற்றுமைக்கு அச்சுறுத்தல் என ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவித்திருந்தார்.

2018 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட குறித்த முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் கடந்த வெள்ளிக்கிழமை (08) இரவோடு இரவாக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சிறிசற்குணராஜா தலைமையில் இடித்தழிக்கப்பட்டது.

இதற்கிடையில், மாணவர்களின் போராட்டத்தை அடுத்து போரின் போது கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு புதிய நினைவுச் சின்னத்தின் கட்டுமானப் பணிகள் நேற்று (11) ஆரம்பிக்கப்பட்டது.

அதன்பிரகாரம் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சிறிசற்குணராஜா மற்றும் மாணவர்கள் இணைந்து இடித்தழிக்கப்பட்ட இடத்திலேயே அடிக்கல்லினை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் அனைத்து தூபிகளையும் இடித்தழிக்க வேண்டும்!

## தற்துணிவான துணைவேந்தர் என்கிறார் விமல்!



யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட தூபியை மாத்திரமல்லாது விடுதலைப் புலிகளை நினைவுகூரும் தூபிகள் வடக்கில் எங்கெல்லாம் இருக்கின்றதோ அவற்றை முழுமையாக இடித்தழிக்க வேண்டுமென அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அத்துடன், விடுதலைப் புலிகளை நினைவுத் தூபிகள் அமைத்தோ அல்லது பகிரங்க நிகழ்வுகள் நடத்தியோ நினைவுகூரல் நடத்துவது நாட்டின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெரும் குற்றமாகும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் அவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவிக்கையில், “ஒரு பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்ற வகையில் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த தூபியைத் துணைவேந்தர் இடித்து அகற்றியுள்ளார். இது அவரின் தற்துணிவை எடுத்துக்காட்டுகின்றது.

இறுதிப்போரில் மரணித்த பொது மக்களை நினைவேந்தும் தூபி என்ற பெயரில் அங்கு அமைக்கப்பட்டிருந்தது புலிகளை நினைவேந்தும் தூபியே. இதைப் பல்கலைக்கழகத்தில் வைத்திருப்பது சட்டவிரோதமானது. அதற்கமைய நல்லதொரு தீர்மானம் எடுத்து அந்தத் தூபியைத் துணைவேந்தர் இடித்துள்ளார்.

மூவின மாணவர்களின் நன்மை கருதி இந்தத் தீர்மானத்தை அவர் எடுத்திருப்பாரென நான் நினைக்கின்றேன். எனவே, மாணவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாமல் கல்வியைத் தொடர வேண்டும்” என விமல் குறிப்பிட்டுள்ளார்.

# பிரித்தானியர்கள் இலங்கைக்கு வர தடை!

பிரித்தானியா பிரஜைகளை தவிர ஏனைய நாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தரலாம் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் கொரோனா வைரஸ் தாக்கம் பரவலடையாது என்றும் உக்ரைன் நாட்டு பயணிகள் நாட்டுக்கு வருவதை தடுக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் தாக்கம் எப்போது முடிவுக்கு கொண்டுவரப்படும் என குறிப்பிட முடியாது என்றும் எனவே கொரோனா தாக்கத்தினால் எழுந்துள்ள சவால்களை சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு மத்தியில் வெற்றி கொள்ளவேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட செயலக பிரிவில் இடம்பெற்ற நகர அபிவிருத்தி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், “பிரித்தானிய நாட்டு பிரஜைகள் நாட்டுக்குள் வருவதற்கு மாத்திரமே தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய நாட்டவர்கள் இலங்கைக்கு சுற்றுலா பயணங்களை மேற்கொள்ளலாம்.

உக்ரைன் நாட்டவர் மாத்திரமல்ல ஏனைய நாட்டவர்களுக்கும் இலங்கைக்கு சுற்றுலா பிரயாணங்களை மேற்கொள்வதை தடுக்கும் தீர்மானத்தை சுகாதார தரப்பினரும் கொவிட்-19 வைரஸ் தொடர்பான தொழில்னுட்ப குழுவினரும் மாத்திரமே எடுப்பார்கள்.

பிரித்தானிய நாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் நாட்டுக்குள் வருவதற்கு மாத்திரம் இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதிக்கு பின்னர் வணிக விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும். சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை மேம்படுத்த புதிய சுகாதார திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம், சர்வதேச



விமான சேவைகள் அமைப்பு ஆகிய அமைப்புக்களின் பரிந்துரைகளுக்கு அமையவே சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குள் வரும் சுற்றுலாப் பிரயாணிகள் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும். இதனை சுற்றுலா சேவை முகவர்களுக்கு தெளிவாக குறிப்பிட்டுள்ளோம். சுற்றுலாப் பிரயாணிகளை அழைத்து வரும் செயற்திட்டம் தொடர்ந்து அவதானிக்கப்படுகிறது” என மேலும் தெரிவித்தார்.

# வவுனியாவில் மேலும் 24 பேருக்கு கொரோனா: மொத்த எண்ணிக்கை 103ஆக அதிகரிப்பு

வவுனியா நகர கோரோனா தொற்று கொத்தணியுடன் தொடர்புடையோரிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் மேலும் 24 பேருக்கு வைரஸ் தொற்றுள்ளமை நேற்று (திங்கட்கிழமை) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் வவுனியா நகர கொத்தணியுடன் தொடர்புடைய 49 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதனையடுத்து, வவுனியா நகர கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 103ஆக உயர்வடைந்துள்ளது.

வவுனியா மாவட்டத்தின் நகரப் பகுதியில் உள்ள பஜார் வீதி, தர்மலிங்கம் வீதி மற்றும் மில் வீதிகளில் காணப்படும் வர்த்தக நிலையங்களில் கடமை புரிபவர்களுள் 54 பேருக்கு கடந்த 8ஆம் திகதி கோரோனா தொற்று உறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குடும்பச் சட்டத்தில் மாற்றம்!

விவாகரத்து, திருமண முடிவுறுத்தல், விவாகரத்து கொடுப்பனவு, பிள்ளைகள் பொறுப்பு மற்றும் சொத்துப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் குடும்பச் சட்டத்தை மாற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திருமணம், விவாகரத்து மற்றும் அதனுடன் தொடர்புடைய நடைமுறைகள் 1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருமண பதிவு கட்டளைச் சட்டத்திலும், குடியியல் வழக்கு சட்டக்கோவையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போதைய கட்டளைக்கு ஏற்ப கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் காணப்படுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# வடக்கில் நேற்று மாத்திரம் 51 பேருக்கு கொரோனா தொற்று கண்டறிவு

வடக்கு மாகாணத்தில் நேற்று மாத்திரம் 55 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர், வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 427 பேருக்கும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் 313 பேருக்கும் நேற்று (திங்கட்கிழமை) பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில், யாழ். போதனா வைத்திய சாலை ஆய்வுகூட பரிசோதனையில், வடக்கில் 31 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதன்படி, யாழ்ப்பாணத்தில் உடுவில் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் கிளிநொச்சியில் தனிமைப்படுத்தலில் உள்ள பளை பகுதியைச் சேர்ந்த ஒருவரும் முல்லைத்தீவில் இருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஏனைய 27 பேரும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என வைத்தியர் சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, யாழ். மருத்துவபீட ஆய்வுகூட பரிசோதனையில், வவுனியாவைச் சேர்ந்த 24 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் வவுனியாவில் மாத்திரம் நேற்று 51 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவுக்கு கொரோனா

இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸநாயக்கவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே, தயாசிறி ஜயசேகர, ரவூப் ஹக்கீம் மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்ட நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளான நான்காவது நாடாளுமன்ற உறுப்பினராக விமலவீர திஸாநாயக்க பதிவாகியுள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே அதிகரித்துவரும் கொரோனா தொற்றையடுத்து, எதிர்வரும் 13 மற்றும் 15ஆம் திகதிகளில் காலை 10 மணி முதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடாளுமன்றத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ள சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.